**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2022 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான நெசவு கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை,

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய வருமான தலைப்பிற்காக சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 1,740,746 குறைத்தும், முற்பண அறவிடல் ரூபா 109,670 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்த காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 1,631,076 இனால் குறைக் கணக்கிடல் செய்யப்பட்டு இருந்தது. | ஏனைய வருமான தலைப்பிற்காக சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் முற்பணம் அறவிடலை சரிசெய்து, காசுப் பாய்ச்சல் கூற்று சரிசெய்யப்பட்டதாக. | காசுப் பாய்ச்சல் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில காட்டப்பட வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களஙகளால் மேற்கொண்ட ஆளணி சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவு ரூபா 242,430 மற்றும் நிவாரணம் மற்றும் மாற்றல்கள் ரூபா 143,679,980 மற்றும் வேறு செலவின தலைப்பிற்காக மேற்கொண்ட செலவுகள் ரூபா 357,650 கூடுதலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 144,280,060 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஆளணி சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினம், நிவாரணம் மற்றும் மாற்றல்கள் வேறு செலவின தலைப்பிற்காக மேற்கொண்ட செலவுகளை சரிசெய்து காசுப் பாய்ச்சல் கூற்றை சரிசெய்ததாக. | காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாக காட்ட வேண்டும். |

**(இ) மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீடுகளை கைப்பற்றலில் நி.பி. 208 இக் கீழ் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களஙகளால் மேற்கொண்ட ரூபா 1,975,930 தொகையும் உள்ளடங்கி இருந்த காரணத்தால் முதலீட்டு செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் ரூபா 1,975,930 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்சல் கூற்றில் தவறுதலாக குறிக்கப்பட்டு உள்ளதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றை சீர்செய்ததாக. | காசுப் பாய்சல் கூற்றிறை சரியாக காட்ட வேண்டும். |

**(ஈ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியில் 8.2 பந்தி பிரகாரம் மேலும் அறிக்கையிட வேண்டிய நிதியல்ாத சொத்துக்கள் காணப்படின் அதனை இனங்கண்டு கிரயத்தில் அல்லது கிரயத்தை இனங்காண முடியாதெனில் மதிப்பீட்டு பெறுமதிக்கேனும் அறிக்கையிட வேண்டிய போதும் திணைக்களத்திற்கு சொந்தமான 09 நெசவு பாடசாலைகள், 08 நெசவு தொழிற்சாலைகள் மற்றும் 02 சுற்றுலா விடுதிகளின் காணிகளின் மற்றும் வாகணமொன்றின் பெறுமதி 2022 திசெம்பர் 31 அளவிளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை இதுவரை கிடைக்காததால் மதிப்பீடு செய்ய குழுவொன்றை நியமிக்க கட்டளை கிடைத்துள்ளதாக. அதே போன்று இலக்கம் 51-5959 கொண்ட டொயோடா வகையான வேன் வண்டி 2022 ஆண்டின் அதிக காலம் திருத்த நடவடிக்கைகளுக்கு ஊர்திச்சாலையில் இருந்ததால் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியாமல் போனதாக. | குறித்த சுற்றிக்கை, வழிகாட்டியிற்கு இணங்க நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(உ) கணக்காய்விற்காள சாண்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சோந்தமானதாக காண்பிக்கப்பட்டிருந்த 14 நெசவுக்கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இரண்டு சுற்றுலா விடுதிகளின் உரிமையை உறுதிப்படத்திக் கொள்ள சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்தினால் பயன்படுக்ன்ற காணிகளில் உரிமையை உறுதிப்படுத்திக்ொகள்வத தொடர்பாக நடவடிக்கைகள் துரிதமாக/விரைவில் பூர்த்தி செய்ய கவனம் செலத்தியுள்ளதாக. | பயன்படுத்தும் காணிகளின் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலல்லே சக்திவள நெசவுக் கைத்தொழில் காணி மற்றும் கட்டிடத்தை 2010 ஆண்டு முதல் 30 ஆண்டுகளிற்கு தனியாார் கமிபனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கி இருக்கையில் 2016 ஆண்டு முதல் குத்தகை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. 2016 முதல் 2019 வரையான ரூபா 8,910,000 ஆன நிலுவை குத்தகை மீதியை, 2022 திசெம்பர் 31 வரையிலும் அறவிட்டிருக்கவில்லை. மேலும், அக் கட்டிடத்துடன்கூடிய காணியை குத்தகைதாரர் பயன்படத்திக் கொண்டிருந்த போதும் கணக்காய்வு திகதி வரையும் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் குத்தகை உடன்படிக்கை 2019 செப்டெம்பர் 02 ஆம் திகதி முதல் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நிலுவை குத்தகை தொகையை அறவிடுவதற்கான சட்டரீதியான செயற்முறை ஆரம்பிக்க தொடர்புடைய ஆவணங்கள் 2020 சனவரி 30 ஆம் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் காணி தொடர்பாக 2022 ஆகஸ்ட் 08 திகதி காணி ஆணையாளர் நாயகத்திடம் ஆலோசனை கோரியுள்ளதாக. | நிலுவை குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | யடிநுவர சக்திவள நெசவுக் கைத்தெழில் நிறுவனம், தனியார் நிறுவனமொன்றிற்கு 2000 ஆண்டு முதல் 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கியிருந்தது. அனுமதியற்ற குடியிருப்பாளர் ஒரவர் அவ் வளவில் தங்கியுள்ள காரணத்தால் குத்தகை ஆதனத்தின் தீர்த்த உரிமையை வழங்காததனால் 2000 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை செலுத்த வேண்டிய குத்தகை ரூபா 2,756,000 தொகையை செலுத்துவதனை குத்தகைதாரரினால் புறக்கணிக்கப்பட்டு இருந்தது. அத் தொகையை அறவிட மற்றும் அனுமதியற்ற குடியிருப்பை அகற்றி காணியின் தீர்த்த உடமையை பிரதேச செயலாளரிற்கு ஒப்படைக்க கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட மா அதிபர் ஆலோசனை பிரகாராம், அனுமதியற்ற குடியிருப்பை அகற்றுவதனை பிரதேச செயலாளரிற்கு அனுப்ப 2018 ஜுலை 22 ஆம திகதி அறிவித்துள்ளதுடன் நிலுவை குத்தகை தொகையை தவணைகளாக செலுத்தி முடிவிக்க குத்தகைதார் 2023 ஏப்ரல் மாதம் கோரிக்கையொன்றை சமர்பித்துள்ளதாக. | நிலுவை தொகையை அறவிடுவது மற்றும் அனுமதியற்ற குடியிருப்பை அகற்றி காணியின் தீர்த்த உடமையை பிரதேச செயலாளரிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 1996 ஆண்டு முதல் 30 ஆண்டுகளிற்காக பிபில நிம்ஹல நிறுவனத்தை தனியார் கம்பனியொன்றின் முகாமைத்துவ பணிப்பாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை குத்தகை தொகைக்குரியதாக 2022 செப்டம்பர் 27 திகதிய இறுதி பிணக்குகள் தீர்ப்பு முடிவின் பிரகாரம் ரூபா 1,681,250 மற்றும் வட்டியை செலுத்த கட்டளை இடப்பட்டுள்ள போதும், குத்தகைதாரர் கொடுப்பனவை புறக்கனித்திருந்தார். | நியாய மன்றத்தில் வழங்கப்பட்ட கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால், முன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆவணங்கள் 2022 செப்டம்பர் 05 திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாக. | முன் சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவை குத்தகை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஓய்வு பெற்ற இரண்டு அலுவலர்களிடம் இருந்து இரண்டு மூன்று ஆண்டுகளிற்கு இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 177,805 ஆன கடன் மீதியொன்று தொடர்பாக் தாபன விதிக்கோவை XXIV அத்தியாயத்தின் 4.5 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வூதியம் தயாரிப்பதுடன் தொடர்பான தகவல்களிலான குறைபாடுகளை சரி செய்து ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி உள்ளதுடன் அக் கடன் மீதியை தீர்த்துக் கொண்ட பின்னர் கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமை பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கையியந்திர நெசவுக் கைத்தொழில் கிராம மட்டத்தில் விரிவுபடுத்தி கிராமிய உற்பத்தியாளர்களை உருவாக்கும் நோக்கில் செயற்படும் கையியந்திர நெசவுக் கைத்தொழில் கிராம கருத்திட்டத்திற்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் கொள்வனவு செய்த கையியந்திரம் சார்ந்த உபகரணங்களின் பெறுமதி ரூபா | செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கியுள்ள கருத்திட்ட எண்ணிக்கையை கருத்திற் கொண்டு தேவைப்படுகின்ற கையியந்திர அளவை எதிர்வுகூர்ந்து பெறுகை செய்த போதும் கையியந்திர கருத்திடங்களை ஆரம்பித்து 06 மாதங்கள் அளவில் செல்லும் போது | இவ்வாறு விளைவற்று நிலவும் கையியந்திர தொகுதியை கையியந்திர கருத்திட்ட நலன்பெறுனர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| 23,960,750 ஆன 220 கையியந்திர தொகுதிகள் மற்றும் 195 வையின்டிங் இயந்திரத் தொகுதிகள் அறிக்கை திகதி வரையும் விளைவற்று காணப்பட்டன. | எதிர்பாரா விதமாக ஆரம்பத்தில் எதிர்பார்த்த அளவு பயிற்சியாளர்கள், பயிற்சியை பூர்த்தி செய்யாத காரணத்தால் கையியந்திர அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளதாக.<br><br>அந்த கையியந்திரத் தொகுதிகளை எதிர்காலத்தில் உரியவாறு கருத்திட்ட நலன்பெறுனர்களுக்கு வழங்க முடியுமென. | வேண்டியதுடன் பின்னர் கொள்வனவு செய்கையில் சரியாக எதிர்வுகூர்ந்து கருத்திட்ட எண்ணிக்கைக்கு இணைக்கக் கூயடிவாறு கொள்வனவு செய்ய வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை.**

மீளாய்வாண்டில் 14 நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனங்களின் நிர்வாகத்திற்காக ரூபா 3.835 மில்லியன் செலவிட்டிருந்த போதும் கையியந்திர நெசவுக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக தொழிலாளர்களை பயிற்றுவித்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் ஆறு மாத பாடநெறியை 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் மாத்தறை மற்றும் கட்டுபெத்த நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனம் இரண்டில் மாத்திரம் நடாத்தி இருந்ததுடன் முறையே மாணவர்கள் 2 பேர்கள் மற்றும் 04 பேர்கள் மாத்திரம் பாடநெறியை பூர்த்தி செய்திருந்தனர். | விண்ணப்பதாரர்களின் கோரிக்கை பிரகாரம் ஆறு மாத கால பாடநெறியை திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படுவதுடன் கோரிக்கை சமர்பித்திருந்த பிரதேசத்தின் பிரகாரம் மாத்தறை மற்றும் கட்டுபெத்த நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனங்களில் இந்த பாடநெறி நடாத்தப்பட்டது. | நெசவு கைத்தொழில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படும் தொகைக்கு ஒப்பாக இப் பாடநெறிக்கான மாணவர்களின் பங்குபற்றளை அதிகரிக்க பொருத்தமான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் முறையே 147 மற்றும் 87 மாணவர்கள் இறுதி சான்றிதல் பரீட்சையை பூர்த்தி செய்துள்ள போதும், பாடநெறிக்காக மாணவர்களின் பங்குபற்றல் கடந்த ஆண்டைவிட 40 சதவீதத்தால் குறைவடைந்து இருந்தது. | நள்ளூர், மாத்தறை, கொட்டள, கட்டுபெத்த ஆகிய நெசவு பாடசாலை பயிற்சிக்காக ஆரம்பத்தில் வருகைதந்த மாணவர்கள் பாடநெறி நடக்கும் இடைநடுவே நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் மீது வேறு தொழில்களை தேடிக் கொள்ளல் மற்றும் போக்குவரத்து செலவு உள்ளிட்ட வாழ்கை செலவு அதிகரித்தமை போன்ற காரணங்களின் மீது இடை நடுவே பாடநெறியை விட்டு சென்றுள்ளதாக. | |
| (இ) | மீளாய்வாண்டில் 4 நெசவுத் தொழில் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் அளவு 1 முதல் 4 வரையான வீச்சளவில் நிலவியமை மிக்க குறைந்த மட்டமொன்றாகும். | | |

(ஈ) மாணவர்கள் 119 பேர்களிற்கு தங்குமிட வசதி வழங்க முடியுமான 13 நெசவுத் தொழில் நிறுவனஙகளில் மீளாய்வாண்டில் 58 மாணவர்கள் மாத்திரம் தங்குமிட வசதிகளை பெற்றிருந்தனர். அதன் பிரகாரம் வழங்க முடியுமான தங்குமிட வசதிகளில் 52 மாணவர்கள் பயன்படுத்தி இருக்கவில்லை.

## 3.3 சொத்தக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிமையை குறிப்பாக இனங்காணாத, காவல் அறையொன்று மற்றும் 02 கட்டிடங்களுடன் கூடிய ராஜகிரியவில் அமைந்துள்ள 30 பர்சஸ்களுடனான இயற்கை வர்னப்படுத்தும் நிலையம் 2 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது, | இந்த காணி ஸ்ரீ ஜயவர்தன கோட்டே பிரதேச செயலாளரிற்கு ஒப்படைக்குமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக. | இக் கட்டிடம் குறித்த பணிகளிற்காக தற்போது பயன்படாததால் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதி பௌதீக ரீதியாக காணப்படும் நூல் இருப்புக்களின் அளவு 6,798 Kg ஆகும். அவ்வாறான போதும் இவ்விறுப்பு நெசவு பாடசாலைகளுக்காக பேணிக் கொள்ள வேண்டிய நூல் இருப்பை தேவைப்பாட்டை விஞ்சி காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன், அந்த மிகை இருப்பை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்திக் கொள்ள வேலைத்திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | களஞ்சியத்தில் காணப்படும் நூல் இருப்பு அளவு நெசவு பாடசாலைகளிற்காக பயன்படுத்தி முடிவடையும் வரை மீண்டும் நூல் இருப்பு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டாம் என விடய பொறுப்பு அலுவலரை அறிவூட்டியதாக. | மேலதிக இருப்பை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும் வெற்றிடத்தை நிரப்பி இருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு அலுவலர் ஒருவரை பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளதுடன் அது வரை அப்பதவியில் பதில் கடமைக்காக பொறுத்தமான அலுவலர் ஒருவரை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கைத்தொழில் அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளதாக. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக திணைக்கள முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுக் கூட்டம் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் திணைக்களத்தில் இல்லாதுள்ளமை, கொவிட 19 தொற்று நிலைமை மற்றும் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையின் முன்னால் திணைக்கள கணக்காய்வு மற்றும முகாமைத்துவ் குழுக் கூட்டத்தை நடாத்த முடியாது போன போதும் ஒரு அமைச்சுக் குழுக் கூட்டத்தை 2022 ஆகஸ்ட் 24 திகதி நடாத்தி திணைக்களம் தொடர்பான விடயங்களை கலந்துரையாடியுள்ளதாக. | முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுக் கூட்டங்களை உரியவாறு நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |